KANCHIPURAM DT

**B**

# அரையாண்டுப் பொதுத் தேர்வு – 2023

## பன்னிரெண்டாம் வகுப்பு

## வணிகவியல்

நேரம்: 3.00 மணி | மதிப்பெண்கள்:90

### பகுதி – I

(I) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்
(II) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையை தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். 20x1=20

1. மேலாண்மை என்பது ______ ன் செயல் ஆகும்.
அ) மேலாளர் ஆ) கீழ் பணியாளர் இ) மேற்பார்வையாளர் ஈ) உயரதிகாரி

2. ______ ன் உதவியுடன் இலக்குகள் அடையப்படுகின்றன.
அ) செயலூக்கமளித்தல் ஆ) கட்டுப்படுத்துதல்
இ) திட்டமிடுதல் ஈ) பணியமர்த்துதல்

3. மூலதனச் சந்தை என்பது ______ க்கான ஒரு சந்தை ஆகும்.
அ) குறுகிய கால நிதி ஆ) நடுத்தர கால நிதி
இ) நீண்ட கால நிதி ஈ) மேற்கூறிய அனைத்தும்

4. பணச் சந்தையில் முக்கிய பங்காற்றும் அமைப்பு ______
அ) வணிக வங்கி ஆ) இந்திய ரிசர்வ் வங்கி
இ) பாரத ஸ்டேட் வங்கி ஈ) மைய வங்கி

5. நம்பிக்கையுள்ள வணிகர் என்பவர் ______
அ) காளை ஆ) கரடி இ) மான் ஈ) வாத்து

6. தேசிய பங்குச் சந்தையில் புறத்தோற்றமற்ற பத்திர வர்த்தகம் தொடங்கிய ஆண்டு ______ ஆகும்.
அ) ஜனவரி 1996 ஆ) ஜூன் 1998 இ) டிசம்பர் 1996 ஈ) டிசம்பர் 1998

7. மனித வள மேலாண்மை ______ உறவினை நிர்ணயிக்கிறது.
அ) அக, புற ஆ) முதலாளி, தொழிலாளி
இ) உரிமையாளர், வேலைக்காரன் ஈ) முதல்வர், முகவர்

8. விளம்பரம் என்பது ஒரு ______ ஆள் சேர்ப்பு வளமாகும்.
அ) அகவளங்கள் ஆ) புற வளங்கள்
இ) முகவர் ஈ) புறத்திறனீட்டல்

9. பங்கு பரிவர்த்தனை சந்தை இவ்வாறு அழைக்கப்படுகிறது.
அ) களச்சந்தை ஆ) உள்ளூர் சந்தை
இ) பத்திரங்களின் சந்தை ஈ) தேசிய சந்தை

10. கீழ் கொடுக்கப்பட்டுள்ள கூறுகளில் சந்தையிடுகை கலவைக்கு தொடர்பு இல்லாத ஒரு கூறு எது?
அ) இடக்கூறு ஆ) பொருள் கூறு இ) திட்டக்கூறு ஈ) விலைகூறு

11. நுகர்வோர் இயக்கத்தின் தந்தை யார்?
அ) மகாத்மா காந்தி ஆ) ஜான். எப். கென்னடி
இ) ரால்ப் ரேடர் ஈ) ஜவஹர்லால் நேரு

12. ______ என்பவர் நவீன சந்தையியலின் மன்னர் ஆவார்.
அ) நுகர்வோர் ஆ) மொத்த வியாபாரி
இ) உற்பத்தியாளர் ஈ) சில்லறை வியாபாரி

13. வணிகத்தின் பரந்த சூழல் ஒரு ______ காரணியாகும்.
அ) கட்டுபடுத்த முடியாது ஆ) கட்டுப்பாட்டிற்கு உட்பட்டது
இ) சமாளிக்க கூடியது ஈ) சமாளிக்க முடியாதது

14. பொதுத்துறைக்கு ஒதுக்கப்பட்ட தொழில்களை தனியார் துறைகள் துவங்க அனுமதிப்பது ______ ஆகும்.
அ) தாராள மயமாக்கல் ஆ) தனியார் மயமாக்கல்
இ) உலக மயமாக்கல் ஈ) பொது நிறுவனம்

15. விற்பனை ஒப்பந்தத்தில் யாருக்கு விற்பதற்கு உரிமை உண்டு ?
அ) வாங்குனர் ஆ) விற்பவர்
இ) வாடகைக்கு எடுப்பவர் ஈ) அனுப்பப் பெற்றவர்

16. எத்தனை மாதங்களுக்கு பின் காசோலை காலாவதியாகிறது
அ) 3 மாதங்கள் ஆ) 5 மாதங்கள் இ) 4 மாதங்கள் ஈ) 1 மாதங்கள்

17. தொழில் முனைவோரை கீழ் குறிப்பிட்டபடி எப்படி வகைப்படுத்த முடியாது ?
அ) இடர்தாங்கி ஆ) புதுமைபடைப்பவர் இ) ஊழியர் ஈ) அமைப்பாளர்

18. கூட்டுப்பங்கு தொழில் முனைவோரின் வேறு பெயர்
அ) அகத்தொழில் முனைவோர் ஆ) தோற்றுவிப்பாளர்
இ) மேலாளர் ஈ) பங்குநர்

19. முந்தைய பங்குதாரர்களுக்கு எந்தவித கட்டணமும் இல்லாமல் வெளியிடும் பங்குகள் ______
அ) ஊக்கப் பங்குகள் ஆ) சாதாரணப் பங்குகள்
இ) உரிமைப் பங்குகள் ஈ) முன்னுரிமைப் பங்குகள்

20. ஒரு பொது நிறுமம் நிர்வாக இயக்குநர்கள் மற்றும் முழு நேர இயக்குநர்கள் உட்பட அதன் இயக்குநர்களுக்கு வழங்கும் ஊதியம் அதன் நிகர இலாபத்தில் ______ ஐ விட அதிகமாக இருக்க கூடாது.
அ) 5% ஆ) 11% இ) 15% ஈ) 20%

## பகுதி II

**குறிப்பு : எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்**
**வினா எண் – 30 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்** **7x2=14**

21. திட்டமிடுதல் என்றால் என்ன ?
22. மூலதனச் சந்தையின் பங்கேற்பாளர்கள் யார் ?
23. இந்தியாவில் உள்ள ஏதேனும் 4 பங்குச் சந்தைகளை பற்றி எழுதுக.
24. மனித வள மேலாண்மை என்றால் என்ன ?
25. சந்தையிடுதல் என்றால் என்ன ?
26. ஜான் F கென்னடி கூறிய நுகர்வோரின் உரிமைகள் யாவை ?
27. மாற்று முறை ஆவணம் என்றால் என்ன ?
28. டிஜிட்டல் இந்தியாவைப் பற்றி குறிப்பு வரைக.
29. "பகராள்" சிறு குறிப்பு வரைக.
30. VUCA –ஐ விரிவாக்கம் தருக.

## பகுதி III

**குறிப்பு : எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்**
**வினா எண் – 40 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்** **7x3=21**

31. குறியிலக்கு மேலாண்மையின் ஏதேனும் மூன்று செயல் முறைகளை பட்டியலிடுக.
32. பணச்சந்தையில் ஈடுபடும் பங்கேற்பாளர்கள் யாவர் (ஏதேனும் 3)
33. காளை மற்றும் கரடி – விளக்குக.
34. கட்டமைக்கப்பட்ட நேர்காணல் என்றால் என்ன ?
35. தனியிடச்சந்தை பற்றி விளக்குக.
36. தேசிய ஆணையத்தின் உறுப்பினர்கள் பற்றி விவரி ?
37. தாராளமயமாக்கல் என்றால் என்ன ?

38. காலம் கடத்தும் பழமைவாத தொழில் முனைவோர் பற்றி சுருக்கமாக எழுதுக.
39. எப்பொழுது மாற்று இயக்குநர்களை நியமிக்கலாம்?
40. சாதாரண தீர்மானம் தேவைப்படும் ஏதேனும் மூன்று செயல்பாடுகளை தருக.

## பகுதி IV

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்** **7x5=35**

41. அ) நவீன மேலாண்மைக் கோட்பாடுகளை விவரி (ஏதேனும் 5)

அல்லது

ஆ) ஆட்சேர்ப்பு முறையில் உள்ள புறவளங்களை விளக்குக. (ஏதேனும் 5)

42. அ) பல்வேறு வகையான நிதிச் சந்தைகளை விவரி (ஏதேனும் 5)

அல்லது

ஆ) நுகர்வோர் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள் (ஏதேனும் 5)

43. அ) செபியின் பணிகளை விவரி (ஏதேனும் 5)

அல்லது

ஆ) சந்தை எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது? விவரி (ஏதேனும் 5)

44. அ) எல்பிஜி (LPG) யின் சிறப்பு அம்சங்களை விளக்குக. (ஏதேனும் 5)

அல்லது

ஆ) மகளிர் தொழில் முனைவோர் சந்திக்கும் பிரச்சினைகளை விவரி. (ஏதேனும் 5)

45. அ) காசோலையின் இயல்புகள் கூறி விளக்குக.

அல்லது

ஆ) இயக்குநரின் பல்வேறு வகைகளை சுருக்கமாக விவரி. (ஏதேனும் 5)

46. அ) மனித வளத்தின் சிறப்பியல்புகளை விளக்குக. (ஏதேனும் 5)

அல்லது

ஆ) பங்குகளுக்கும், கடனீட்டுப் பத்திரத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? (ஏதேனும் 5)

47. அ) நுகர்வோரின் கடமைகளை விளக்குக. (ஏதேனும் 5)

அல்லது

ஆ) பணச்சந்தை மற்றும் மூலதனச்சந்தை இரண்டிற்கும் இடையிலான வேறுபாடுகளை விவரி. (ஏதேனும் 5)

***/***